ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

ममापि चेत् द्रोहमुपैति मानसं परेषु मय्यप्रतिरूपवर्तिषु ।
अपारसंसारपरायणात्मनां किमस्ति तेषां मम वा विशेषणम् ॥

என்னிடத்தில் தக்கபடி நடந்துகொள்ளாத பிறர்கள்மீது என்னுடைய மனதும் துரோஹசிந்தையை அடையுமானால் அளவற்று விரிந்து கிடக்கும் ஸம்ஸாரமே பெரிய கதியென்று நினைத்துக்கொண்டிருப்பவர்களுக்கும், விவேக விக்ஞானத்தால் ஸம்ஸாரத்தையே துச்சமென்று தள்ளிவிட்ட எனக்கும் என்ன பேதம்? என்று விவேகி சிந்திக்கவேண்டும். ஸம்ஸாரவாழ்க்கையே பெரிதென்று நினைத்துக்கொண்டிருக்கும் பிராணிகள் பரஸ்பரம் வியவஹாரம் செய்துகொள்ளும்போது எதிராளி எப்படி நடப்பானோ அப்படி நடந்துகொள்ளவேண்டியது. அதாவது—ஒழுங்காய் நடந்தானேயானால் நாமும் ஒழுங்காய் நடக்கவேணும். கோணலாய் நடந்தால் நாமுமப்படியே இருக்கவேணும். ஏமாற்றினால் ஏமாற்றவேண்டும். கோபித்தால் கோபிக்கவேண்டும். துரோகம்செய்தால் துரோகம் செய்யவேண்டும். என்பது ஸம்ஸாரிகள் கொண்டமுறை. இல்லறம்துறந்து ஸர்வத்தியாகம்செய்து ஸம்பாவனையுடன் சாந்தநிலைபெற்ற ஸாதுக்களிடம் அப்படி பழகக்கூடாது. ஆனால் அவர்களுக்கனுகூலமாகவே நடந்துவரவேண்டும். அப்படிக்கில்லாமல் ஒரு ஸம்ஸாரி ஸாதுக்களிடத்திலும் ஸம்ஸாரிகளிடத்தில்போலவே பிரயோஜனங்களைக்கருதி துரோகம்செய்ய நினைத்துவிடுவானாயினும் ஸாதுக்கள் திரும்ப அவனுக்கு துரோகம்செய்ய நினைக்கக்கூடாது. காமக்ரோதாதிகளான உள்ளிருக்கும் ஆறு சத்துருக்களுக்கு வசப்பட்டு ஸம்ஸாரவாழ்க்கையே மிகப் பெரிது, யாருக்கேனும் துரோகம் செய்தாலும் அந்த ஸம்ஸார ஸுகம் பெறுவதே புருஷார்த்தம் என்று நினைத்திருப்பவனைப்போலவே ஸம்ஸாரத்தைத்துச்சமென்றுதள்ளிவிட்ட துறவிகளும் அவர்களுக்கு துரோக சிந்தை செய்வார்களானால் ஸம்ஸாரத்தில்பட்டுழலுபவர்களுக்கும் அந்த ஞானிகளுக்கும் என்னபேதம்? இவர்களும் ஸம்ஸாரியோடொத்தவர்களாகவே ஆகிவிடுவார்களல்லவா? நிரதிசயமான ஆத்மரூப ஆனந்தத்தையே அனுபவிக்கும் பாக்கியம் வாய்ந்த மஹான்களுக்கு அன்னிய துரோகத்தால் ஆகியபயனேதுமுண்டோ? துரோகம் செய்வதால்கிடைப்பது துக்கமேதவிர வேறொன்றுமில்லை, என்று விவேகிகள் நினைத்துக்கொண்டு துரோகிகளிடத்திலும் துரோகபுத்தியை வைக்கக்கூடாது.

சுபம்.

பத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.

ப்ரஜாபதி-௵ மாசி-௴ ௯-உ

ஞானமும், தமமும்.

ஸர்வ சாஸ்திரங்களிலும் அபாதித நிச்சயரூபமான அபார விவேக விக்ஞானம் பெற்றதினால் மஹாபண்டிதாளென்றும் மிக மஹான்களென்றும் பலவிதமான பிருதுகளெல்லாம் பெற்ற மஹாஞானிகள்கூட, லௌகிக வியவஹாரங்களோ வைதிக வியவஹாரங்களோ சாஸ்திரீயமான வாக்கியார்த்த வாதங்களோ அவைகள் எல்லாவற்றிலும் முன்னதாகத் தலைகிளப்பி பிரதானமாக வியவஹரிக்கவரும்போது, சப்த ஞானம் சாஸ்திர ஆராய்ச்சி ஆத்ம குணங்கள் முதலான ஒருவித விவேக விக்ஞானமே இல்லாத கேவல பாமர ஜனங்கள் ஒருவருக்கொருவர் அஜாவிபாலர்கள் போலவே त्वं चोरइत्युक्ते त्वमपिचोर इति நீதிருடன்என்றால் நீதான் திருடன் என்கிற நியாயத்தை அனுஸரித்து கொஞ்சம்கூட குணமில்லாமல் தடபுடவென்று வியவஹரித்துக்கொள்வதுபோலவே படித்தசாஸ்திரங்களில்தாங்கள் அடைந்த அருமையான அளவற்ற நல்ல அறிவுகளுக்குச் சாதனமாக அதே சாஸ்திரங்களில் நன்றாக விவரிக்கப்பட்ட சம தம திதிக்ஷை முதலான ஆத்ம குணங்களைக் கொஞ்சங்கூட கவனிக்காமல், காம குரோதங்களையே பெரிதாக நினைத்து "என்னை ஒருவன் ஒரு வார்த்தைசொல்லும்படி ஆச்சா? விட்டேனா அவர்களை. எந்த சாஸ்திரங்களிலும் எவன்வந்தாலும் सर्वान् जयेय எல்லோர்களையும் ஜயித்துவிடுவேன்" என்று மஹா பண்டிதர்கள்கூட அடக்கமில்லாமல் அஹங்காரவாதம்பேசுவார்களானால், धनाढ्यं ततस्सुखं என்ற வசனப்படி தனிகனாயுள்ளவன் (அதாவது பணமுள்ளவன்) தன் பணத்திற்கனுகுணமான தர்மங்களை ஸம்பாதித்து அந்ததர்மத்திற்கொப்பான ஸுகங்களையடைய வேண்டும் என்பதைக்கொஞ்சங்கூட அனுஷ்டானத்தில் வைத்துக் கொள்ளாமல் பணத்தை எண்ணி எண்ணிப்பார்த்து பெட்டியில்

அழகாய் அடுக்குகளாக வைப்பதும், பாண்டு முதலிய பத்திரங்களை வாசித்து வாசித்து வட்டிகூட்டி போட்டுவைப்பதுமான தனிகர்களுக்கு தனத்தாலேற்பட்ட தர்ம ஸுகாதிகள் கிடைக்காமல் பல ஜனங்கள் அர்த்தமில்லாமல் தநீ என்ற வெறும்பேரு மட்டும் சொல்வதினுல் எப்படி ஒருவித உபயோகம் கிடைக்காதோ அதுபோலவே குணமில்லாத மஹா ஞானிகளைப்பார்த்து ஒரு ஸ்வானுபவமுள்ள மஹா ஞாநி தன்னைச் சொல்லிக்கொள்வது போல் அன்னியாபதேசத்தால் முன்பக்கத்தில் காட்டிய சுலோகத்தால் ஆத்மகுணமுள்ள மஹாஞானிகள் தமம் என்கிற குணத்தை ரொம்ப பெரிதாக எண்ணி தனக்கு நேரிட்ட மஹா துவேஷம் செய்தவனிடத்தில்கூட துரோகசிந்தை செய்யக்கூடாது. செய்தால் நாமும் அக்ஞானிகளைப்போலாகிவிடுவோம் என்று ஞாந மஹிமையை ஞானசாதனமான அனேக குணங்களுக்குள் தமம் என்கிற குணத்தைக்கொண்டு ஞானி என்ற வெறும் பெயரோடு இராமல் அர்த்தத்தோடு கூடிய ஞாநியாக ஆகவேண்டுமென்று உபதேசித்தார். தமமென்மது முக்கிய ஸாதனம் என்பதற்கு வசனம்.

दमं निश्रेयसे प्राहुः वृद्धा निश्चयदर्शिनः ।
ब्राह्मणस्य विशेषेण दमो धर्मः स्सनातनः ॥

தமமே சிரேயஸ்ஸுக்கு ஸாதனமென்று நிச்சய ஞானமுள்ள பெரியோர்கள் சொல்லுகிறார்கள். அதிலும் அது பிராமணனுக்கு ரொம்ப விசேஷமான ஸாதனம். பின்னும்

दमेन सदृशं धर्मं नान्यं लोकेषु शुश्रुम ।
दमो हि परमो लोके प्रशस्तस्सर्वकर्मणाम् ॥

இந்த தமமென்கிற குணத்திற்கு ஸமானமான குணமே அரிது அன்று. ஆகையால் தமத்தோடு ஞானமிருந்தால்தான் நல்ல நிச்சிரேயஸம் முதலான பலனுண்டு.

சுபம்.

பத்திராதிபர்.

உபதேச ஸாரம்.

பிராணாத்ம வாதம்.

ஸ்தூல சரீரமே ஆத்மா என்பதைப் பார்க்கிறோம். இந்திரியங்களை ஆத்மாவென்று சொல்லுவது நல்லது என்று முன்கூறப்பட்டது. அதில் இந்திரியாத்தும வாதியைவிட சிறந்த புத்தியுள்ளஓர்சார்வாகமதஸ்தன்பேசுகிறான். இந்திரியங்களேஆத்துமா என்றால் ஒரு சரீரத்தில் எவ்வளவு ஆத்மாக்கள்? ஒரு சரீரத்தில் ஒரு ஆத்மா இருப்பதல்லவா நியாயம். இந்திரியங்களோ பதினொன்று என்று தீர்மானிக்கப்பட்டிருப்பதால் பதினொரு ஆத்துமாக்கள் என்று ஆகிறது. ஆத்மா என்றால் போக்தாவாம். அவனே பிரதானனாகும். அப்படி ஒரு சரீரத்தில் ஒரே ஆத்மா போக்தாவாயிருந்து விஷயபோகங்களை அனுபவிப்பானானால் மற்றவை அவனுக்கு ஸாதகங்களாயிருக்கலாம். பிராதான்னியம் ஒருவனுக்கே இருப்பதால் அபிப்பிராய பேதமும் வாராது. அனேக ஆத்மாக்களானால் எல்லோர்களும் ஸ்வதந்திரர்களானபடியால் அபிப்பிராயபேதம் வரும்போது ஒரு காரியமும் நடைபெறாது. ஒருவிஷயபோகமும் ஸித்திக்கமாட்டாது. ஒரு பிரபுவின் நோக்கத்தை அனுஸரித்து பல பரிஜனங்கள் நடப்பதுபோல் இந்த பதினொரு இந்திரியங்களுக்குள்ள ஒன்றின் நோக்கத்தை அனுஸரித்து மற்றவை நடக்கலாமே என்று கற்பித்தால் எதன் நோக்கத்தை அனுஸரித்து எவை நடப்பது என்று கற்பிக்கமுடியும்? ஒவ்வொன்றும் தன்னோக்கம்போலவே நடக்கவேண்டுமென்றல்லவா அபிப்பிராயப்படும். ஏனெனில் ஒவ்வொன்றும் பிரதானமல்லவா. ஒவ்வொரு சரீரத்திலும் பிரதானனாயுள்ள ஆத்மாவேயல்லவா போக்தா. பதினொன்றும் போக்தாக்களான ஆத்மாக்களென்றால் எல்லோர்களுமல்லவோ பிரதானர்களாவார்கள். அப்பொழுது ஒருவன் நோக்கத்தை அனுஸரித்து மற்றவன் நடப்பதென்பது பொருந்தாது. எவன் நோக்கத்தை அனுஸரிக்கவேண்டியதாகிறதோ! அவன்தான் பிரதானனாவான், மற்றவன் பிரதானனாகமாட்டான். ஆகவே இந்த கற்பனை ஸரியானதல்ல. அன்றியும் எந்த நான் ரூபத்தைக்கண்டேனோ அதே நான் சப்தத்தை கேட்கிறேன் என்ற பிரத்திய பிக்ஞையால் ரூபத்தைக் கண்டவ

னும், சப்தத்தைக் கேட்டவனும், ஒன்றென்று ஏற்படுகிறது. இந்திரியங்களை ஆத்மாவென்றுசொல்லும் வாதத்திலிது பொருந்தாது. கண்ணும் காதும் வெவ்வேறுயிருப்பதாலாமெனக. அன்றியும் இந்திரியங்களைச் சேதனனென்று காட்டக்கூடியதாக ஒரு சுருதி காட்டப்பட்டதல்லவா. அதை முழுவதும் பராமரிசித்தால் இந்திரியங்கள் பிரதானமில்லை என்று புலப்படும். அந்த சுருதியில் பிராணன் சிரேஷ்டனென்பதை நிரூபிப்பதற்காக இந்த இந்திரிய ஸம்வாதம் கற்பிக்கப்பட்டதாம். அதனுல் இந்திரியம் ஆத்மா என்பது பொருந்தாது. ஆனுல் அந்த இந்திரிய ஸம்வாதத்தில் சிரேஷ்டனென்று நிர்தாரணம்செய்யப்பட்ட பிராணனே ஆத்மாவாக இருக்கலாமென்று தோன்றுகிறது. பிராணன் ஒருவனுகவே இருப்பதால் இந்திரியாத்மவாதத்தில் கூறப்பட்ட ஒரு சரீரத்தில் அனேகாத்மாக்களென்ற தோஷம் ஸம்பவிக்க இடமில்லை. இந்த பிராணன்தான் அசனுயை (பசி) பிபாஸை (தண்ணீர்தாகம்)என்ற தர்மங்களையுடையவனுனதலால் அன்னபானுதிகளை மற்ற இந்திரியங்களுக்காகவும் தான் ஏற்றுக்கொண்டு புஷ்டனுகயிருந்து இந்திரியங்களைப் போஷிக்கிறுன் பிராணனுக்கு அன்னபானுதிகள் கிடைக்காவிடில் இந்திரியங்களிருப்பினும் அததற்கு ஸாதாரண விஷயமான ரூபாதிகளில் உணர்ச்சி உண்டாவதில்லை. அன்றியும் பிராணன் ஒருவனே எல்லா அவஸ்தைகளிலும் ஓரேமாதிரியான வியாபாரமுள்ளவன். இந்திரியங்களுக்கெல்லாம் ஆச்ரயனுக இருப்பவன் என்பதாதி யுக்திகளாலும் பிராணன் இந்திரியங்களுக்கும் ஆந்தரனுயுள்ளவன் என்ற சுருதியினுலும் நான் பசியுள்ளவன், நான் தாகமுள்ளவன், என்ற அனுபவத்தாலும், பிராணனே ஆத்மாவென்று சரியென்று தோன்றுகிறது. விவேகிகளுக்கு இது இந்திரியாத்துமவாதத்தை நிராகரிக்க ஒரு உபாயமாம்.

(மனது ஆத்மாவென்னும் வாதம்)

பிராணுத்ம வாதியைவிட மேலான மற்றொரு சார்வாகன் சொல்லுகிறுன். பிராணன் ஆத்மா என்பது பொருந்தாது. பிராணனைவிட ஆந்தரமாக மனது ஒன்று இருப்பதாகவல்லவா சுருதி சொல்லுகிறது. பிராணன் ஆத்மாவாகில் அதே அல்லவா அறிவுக்கும் ஆசிரயமாயிருக்கும். ஸுஷுப்தி அவஸ்தையில் பிராணனிருந்தும் அறிவிருப்பதாகக் காணவில்லையே! அப்பொழுது

எப்படி ஆத்மாவெனத் தகும். ஆகையால் எது இருக்கும்பொழுது அறிவுண்டாகிறதோ? எது இல்லாவிடில் அறிவுண்டாவதில்லையோ? அத்தகைய மனதே ஆத்மாவெனத்தகும். நான் ஸங்கல்ப்பிக்கிறேன். விற்பிக்கிறேன் என்பதாதி அனுபவத்தாலும் மனதே ஆத்மாவென்பது திடப்படுகிறது. நான் பசியுள்ளவன் என்பதாதி அனுபவமோவெனில் நான் பெருத்தவன் இளைத்தவன் என்ற அனுபவம்போல் பிராந்தி அபிமானத்தாலாம். ஆகவே மனதே ஆத்மாவாம். இதுவும் விவேகிகளுக்கு ஸோபான பரம்பரையிலொன்றும். பிராணாத்துமவாதத்தை விலக்கும் உபாயமாம். இவ்விதம் அதி பாமரர்களும், சார்வாக மதஸ்தர்களும் சொல்லும் புத்திராத்துமவாதம் முதல் மன ஆத்ம வாதம்வரை கூறப்பட்டன. இவை நாஸ்திகமதத்தின் ஓர் பிரிவாம்.

(விக்ஞானாத்ம வாதம்)

மற்றும் நாஸ்திகமதப் பிரிவினை ஐந்துண்டு. அதில் பௌத்தர்கள் நான்குபேர்களும் ஜைனமதஸ்தன் ஒருவனுமாக ஐந்து பேர்களாம். அவற்றுள் புத்த தேவர் ஒருவருடைய சிஷ்யர்களே நான்குவிதமாகப் பிரிந்தனர். இதற்கு புத்ததேவரே நான்குவிதமாகப் பிரிந்தார்கள் எனச் சிலர் சொல்லுவார்கள். வேறு சிலர் புத்தர் ஒரேவிதமாகத்தான் உபதேசித்தார். சிஷ்யர்களின் புத்திபேதத்தால் வேறுபட்டதென்பார்கள். அந்நால்வர்களுள் ஸர்வம் சூன்னியம் என்று சொல்பவனொருவன். க்ஷணிகவிஞானம் ஒன்றுண்டு. ஸர்வம் சூன்யமென்பதில்லை வெளிப்படையான மற்றபதார்த்தங்கள்யாவுமில்லை என்றால்சரியெனலாம் என்று மற்றொருவன் கொள்கை. வெளிப்பட்ட பதார்த்தங்களுமுண்டு. ஆனால் அவைகள் பரோக்ஷங்களென்று வேறொருவன் கொள்கை. வெளிப்பட்ட வஸ்துக்களும் பிரத்தியக்ஷங்களே. ஆனால் எல்லாவஸ்துக்களும் க்ஷணிகங்களே. முதல் க்ஷணத்திலுள்ள வஸ்துக்கள் மறுக்ஷணத்தில் நசித்துவிடுகின்றன. ஆனால் அந்த நாசம் பிரத்யக்ஷமாய் புலப்படாது. ஊஹித்துப்பார்த்தால் பிரதிக்ஷணமும் பதார்த்தம் நசிப்பதாகவே தோன்றும். எப்படியெனில் ஸாவயவங்களான பதார்த்தங்களில் காற்று முதலியவைகளால்சிலவஸ்துக்கள் சேர்க்கப்படும்பொழுதும்சிலவஸ்துக்கள் பிரிக்கப்படும்பொழுதும்முன்னிருந்த அவயவி அப்படியேஇல்லா

மல்மாறிவிடுவதாகத் தெரிகின்றதல்லவா. அதனால் ஸர்வவஸ்துக்க ளும் ஒவ்வொரு க்ஷணத்திலும் நசித்து, மறுக்ஷணத்திலுண் டாகின்றன. அப்படியாயின் அதே சரீரம்—அதே மனுஷ்யன்—அதே வஸ்து—என்று நீடித்திருப்பதாக தோன்றுகின்றதே! பிரதிக்ஷணம் வேறுபட்டதாயின் இந்தத்தோற்றம் எங்ஙனம் பொருந்தும்? என்றால் பிராந்தியினாலாமென்க. ஆற்றில் வெள் ளம் புதிதுபுதிதாய் வந்துகொண்டிருக்கையிலும் அதேஜலம் வரு கிறதென்றும் தீபஜ்வாலையில் பிரதிக்ஷணம் மாறுதல் ஏற்பட்டி ருக்கையிலும் அதே தீபஜ்வாலையென்றும் பிராந்தியால் தோன் றுவதுபோலவாமிது. அதில் புத்ததேவர் எவர்களைப்பார்த்து ஸர்வம் சூன்னியமென்று உபதேசித்தாரோ அவர்கள் மாத்திய மிகர்கள் எனப்படுவார்கள். குரு உபதேசித்ததை அப்படியே ஒப்புக்கொண்டபடியால் தாழ்ந்தவர்களாயும் ஆகவில்லை. அவர் சொல்லுவதில் தங்கள் புத்திக்குத்தோன்றும் ஆக்ஷேபத்தைச் சொல்லாதபடியால் உத்கிருஷ்டர்களாயுமாகவில்லை. நடுநிலையிலி ருக்கிறபடியால் மாத்தியமிகர்களாம். வேறு சிஷ்யர்கள் ஸர்வம் சூன்னியமென்பதைக் குரு உபதேசித்திருக்க ஸர்வம் சூன்னிய மாக முடியாது. ஞானமொன்றாவது வஸ்துவாக இருக்கவேண் டும்—என்று கேட்டுக்கொண்டதின்பேரில் அப்படியே இருக்கட் டும் என்று குரு அங்கீகரித்துவிட்டார். அந்த அங்கீகாரத்திற்கு யோகமென்று பௌத்தர்கள் ஸங்கேதம் வைத்திருக்கிறார்கள். அதையே ஆசாரணைக்கு இவர்கள் கொண்டுவந்தார்களானதால் இவர்களுக்கு யோகாசாரர்களென்று பெயர். இவர்கள் அந்த கக்ஷியை பலப்படுத்தினார்கள். ஞானம் கூட இல்லை. ஸர்வம் சூன்னியம் என்பது கூடாது. அப்படியானால் சூன்னியமென் பதே எப்படித் தோன்றும். ஞானமில்லாவிடில் ஒன்றும்தோன்ற வழியில்லையே. ஆகையால் ஞானமொன்றையாவது ஒப்புக் கொள்ளவேண்டும். மற்ற ஆந்தரமான வஸ்துக்களோ, வெளிப் படையான வஸ்துக்களோ ஒன்றுமில்லையென்பது சரியே. அந்த ஞானமும் க்ஷணிகம். அத்தகைய க்ஷணிகவிஞானமே ஆத்மா. என்று யோகசாரர் என்ற பௌத்தர்களது கொள்கை. அதன் பிறகு வேறு சிலர் புத்தரிடம்சென்று தோன்றக்கூடிய வெளிப் பட்ட வஸ்துக்களும் ஒன்றுமில்லையென்று எப்படிச் சொல்ல முடியும். ஞானம் தோன்றுவதால் அதை ஒப்புக்கொள்வது

போல் பாஹ்ய வஸ்துக்களும் தோன்றுவதால் ஒப்புக்கொள்ள வேண்டியவைதான், ஆனால் அவை பிரத்தியக்ஷங்களல்ல. அனுமானத்தைக்கொண்டு அறியவேண்டியதாக இருத்தலால் அவை பரோக்ஷங்களாம் என்பதை அங்கீகரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். அதற்கு புத்ததேவர் இப்படி சூத்திரம் போட்டுக்கொண்டுபோனால் முடிவு எப்படி என்றாராம். அதனால் அந்த சிஷ்யர்களுக்கு ஸௌத்ராந்திகர்கள் என்று பெயர். இவர்களுக்கும் க்ஷணிகவிஞானந்தான் ஆத்மா. மற்ற பாஹ்ய வஸ்துக்கள் பரோக்ஷங்களாம். பின்னும் சிலர் பாஹ்யபதார்த்தம் தோன்றுவதாலதை அங்கீகரிக்கின் பிரத்யக்ஷமாகத்தோன்றுவதால் பிரத்யக்ஷமென்றும் அங்கீகரிக்கவேண்டியதுதான் ஆகவே பாஹ்யவஸ்து பிரத்யக்ஷமில்லை என்றபாஷை விருத்தம் என்று குருவினிடம் ஆக்ஷேபித்தார்கள். பாஷை விருத்தமென்று ஆக்ஷேபித்தபடியால் இவர்களுக்கு வைபாஷிகர்களென்று பெயர். இவர்களுக்கும் க்ஷணிகவிஞானமே ஆத்மா. மற்ற பாஹ்யவஸ்துக்கள் பிரத்தியக்ஷங்களாயுமிருக்கின்றன என்றுமதம். ஆக, நான்கு பௌத்தர்களுள்சூன்யவாதி ஒருவன்தவிர மற்ற மூவர்களும் க்ஷணிகவிஞானமே ஆத்மா என்று அங்கீகரிக்கின்றார்கள். மனோமய கோசத்திற்குள்ளும் ஆந்தரமாக விஞானமிருப்பதாகச் சொல்லும் சுருதியையும் நான் கர்த்தா— நான் போக்தா நானறிகிறேன் என்பதாதி பிரத்தியக்ஷானுபவத்தையும் இவர்கள் பிரமாணமாகக் காட்டுகின்றார்கள். மனது முதலியவைகளோவென்றால் அறிவுக்குக் கருவிகளாம். ஆகவே அவைகளை ஆத்மாவெனக் காட்டிய சுருதி—யுக்தி—அனுபவங்கள் ஆபாஸங்களாம். இந்த வாதமும் பூர்வவாதத்தை நிராகரிப்பதற்கு விவேகிகளுக்கு ஸாதகமாகும். ஆறுவது நாஸ்திகமதம் ஜைனமதமாம். அதில் ஸங்கேதமாக அநேக பதார்த்தங்களை அங்கீகரிக்கின்றார்கள். அவைகளெல்லாம் ஒரு விதமாகவும் நிலைக்கமுடியாதவைகளாம். ஆக நாஸ்திகமதங்கள் ஆறுவிதமாக பிரிந்து கிடக்கின்றன. இவர்களும் ஆத்மாவைப்பற்றியே பேசியிருக்கிறார்கள். ஆனால் அதனுண்மையான தத்துவத்தை உணராமல் மூலமானதோர் முக்கியப் பிரமாணத்திற்கும் கட்டுப்படாமல் தங்களுக்குத் தோன்றியதெல்லாம் ஆத்மாவென்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனாலிவர்கள் சுருதி—யுக்தியாதி

களையும் சொல்லத்தலைப்பட்டது பிரமாணமென்றங்கீகரித்தல்ல. ஆனால் வைதிகர்களோடு வாதம்பண்ணும்பொழுது அவர்கள் பிரமாணமாய் ஒப்புக்கொண்ட வேதத்திலும் தங்கள் கொள் கைக்கு ஆதாரமிருக்கின்றதெனக் காட்டுவதற்கு மாத்திரமாம், என்பது முன்னமே கூறப்பட்டது. இந்த நாஸ்திகர்கள் அவரவரது கொள்கையை ஸ்தாபிப்பதற்கு ஆதாரமாகக் காட்டிய சுருதி யுக்தி அனுபவங்கள் ஆபாஸங்களேயொழிய உண்மையை விளக்கப்போதுமானவையல்ல. முதலில் ஆத்மவஸ்து என்பது யுக்திக்கே எட்டாதது. ஆகவே அதை யுக்தியைக்கொண்டு இன்னதென்று நிலைத்துவிடவோ ஆக்ஷேபித்துவிடவோ முடியாது. அதீந்திரியமான வஸ்துவை இந்திரிய பிரமாணங்களைக்கொண்டு எப்படி அறியமுடியும். ஆனால் அந்த விஷயத்தில் சுருதி சொன்னதைத்தான் நம்பவேண்டும். சுருதியை அனுஸரித்த யுக்தியனுபவாதிகளையும் ஸம்பவம்போல் சேர்த்துககொள்ளலாமேயன்றி கேவல யுக்திவாதத்தையும் பிராந்தியனுபவத்தையும் பிரமாணமாக்கி விடப்படாது. சுருதியைக்கொண்டு தீர்மானிப்பதானால் அந்த சுருதியும் வஸ்துவிஷயத்தில் ஒரே விதமாகக் கூறவேண்டுமேயன்றி பலவிதமாகக் கூறமுடியாது. கிரியைகளில் விகல்பம் ஸம்பவிக்கலாமேயன்றி வஸ்துவில் விகல்பம் ஸம்பவிக்கவே மாட்டாது. ஏனெனில் வஸ்து ஒரேவிதமாகத்தானே இருக்கும். புருஷ புத்தி பேதப்படுவதற்காக வஸ்துவும் பேதப்பட்டுவிடுமா? அப்படி ஒரே விதமாய் நிலைக்கும் வஸ்துவைப்பற்றிய அறிவுதான் உண்மையான அறிவாகும். மற்றவை பிராந்தியேயாம். ஆகையால் புத்திராத்மவாதிமுதல் அந்தந்த வாதிகள் காட்டின சுருதிகளுக்கு ஆத்மஸ்வரூப விஷயத்தில் பேதமிருப்பதினால் அவைகளுக்கு உண்மையான பொருள் அவர்கள் கூறியதல்ல, என்பதை விவேகிகள் உணரவேண்டும்.

மனுஸ்மிருதி அத்தியாயம்–2.

சில வசனங்கள். (11—26)

1. எவன் தன் யுக்திவாதத்தைக்கொண்டு வேதத்தையும், தர்ம சாஸ்த்ரத்தையும், அவமதிக்கிறானோ அவன் ஸாதுக்களால் நாஸ்திகன் என்றும், வேத நிந்தகன் என்றும் தள்ளப்பட வேண்டும்.

2. வேதம், தர்மசாஸ்திரம், ஸதாசாரம், சுத்தமான ஆத்ம திருப்தி. இந் நான்கும் நாம் அனுஷ்டிக்கவேண்டிய விதிகளைக் காட்டுகின்றன.

3. பொருள் சம்பாதிப்பதிலும், சிற்றின்பங்களிலும் மனதை செலுத்தாதவர்களுக்கு தர்மசாஸ்திரம் ஏற்பட்டிருக்கிறது. தர்மசாஸ்திரத்தைத் தெரிந்து கொள்ள விருப்பமுள்ளவர்களுக்கு வேதம் முக்கியபிரமாணம்.

4. வேத வசனங்களில் ஒன்றுக்கொன்று வித்தியாஸம் இருந்தால் அவையெல்லாம் தர்மசாஸ்திரந்தான். இதுவேஞானிகளின் கொள்கை. தெரிந்தவர்கள் அப்படியே உறுதியாய் சொல்லியிருக்கிறார்கள்.

5. ஈசனுல் படைக்கப்பட்டு ஸாஸ்வதி, திருஷத்வதி என்ற இரண்டு புண்ணிய நதிகளுக்கு மத்தியில் இருக்கும் பூமிக்கு பிரம்மாவர்த்தமென்றுபெயர்

6. அப்பிரதேசத்தில் நான்கு வர்ணாச்ரமிகளுக்கும் மற்றவர்களுக்கும் வெகுகாலமாய் தொண்டுதொட்டு வந்திருக்கும் அனுஷ்டானமே ஸதாசாரமென சொல்லப்படும்.

7. குரு, மத்ஸய, பாஞ்சாலசூரஸேநபிரதேசங்கள் பிரம்மாவர்த்தத்திற்கு கொஞ்சம் குறைவான பிரமரிஷி பிரதேசமென்கிற புண்ணிய பூமி.

8. இப் புண்ணிய பூமியில் பிறந்த பிராமணனிடமிருந்து எவர்களும் தங்கள் தங்கள் தர்மங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

9. ஹிமவத் விந்தியபர்வதங்களுக்குநடுவிலும், பிரயாகைக்கு மேற்கிலும், ஸாஸ்வதிநதிமறையும் விநசந பிரதேசத்திற்குக் கிழக்கிலும் உள்ளதிற்கு மத்தியதேசமென்று பெயர்.

10. வேதவிதிகளின்படி கர்ப்பாதான முதலிய ஸம்ஸ்காரங்கள், பிராமண, க்ஷத்திரிய, வைசியர்களுக்குச் செய்யப்பட வேண்டும். இந்த ஸம்ஸ்காரங்கள் சரீரத்தை சுத்திசெய்து இம்மையில் வேதாத்யயனமுதலான அதிகாரத்தைக் கொடுத்து மறுமையில்ஸ்வர்க்கமோக்ஷ பலன்களையும்கொடுக்கின்றன.

R. ஸ்வாமிநாத அய்யர்.

ஸ்ரீ நடேசஸ்துதி.

(31-வது பக்கத்தொடர்ச்சி)

त्यक्त्वा कल्पतरुं स याति धनिकान् क्षुद्रान् फलप्रेप्सया
गाङ्गं वारि विहाय कूपसलिले स्नातुं प्रयाति प्रभो ।
साम्यं दीनदयानिधे स मनुते भृत्यस्य राज्ञा समम्
नाथे त्वय्यखिले स्थिते दिविषदं योवान्यमासेवते ॥७१॥

ஓ ப்ரபோ! ஓ தீநதயாநிதே ஸமஸ்த இஷ்டங்களையும் தருகின்ற ஸகல பூமண்டலங்களுக்கும் நாயகனான நீர் இருக்கும் பொழுது எவன் அன்ய தெய்வத்தை ஆச்ரயிக்கின்றானோ அந்த புருஷன் பலன்களை அடையவேணும் என்கிற இச்சையினாலே கல்ப்பதருவைவிட்டு க்ஷுத்திர தநிகர்களை அடைகிறான். கங்கா ஜலத்தைவிட்டுகிணற்று ஜலத்தில்ஸ்நாநம் செய்கிறான். ராஜனோடு வேலைக்காரனை ஸமமாக நினைக்கிறான். (71)

मुक्त्वा यस्तृणवत्सुखं भवभिया ध्यायन् त्वदङ्घ्रिं सदा
कालं यापयति प्रभो स भुवने धन्यश्चकैवल्यभाक् ।
यो वा संसृतिसंभवं सुखलवं भोक्तुं न शक्नोत्यदो
त्वत्पादांबुजदर्शने च विमुखस्तस्येश मोक्षः कुतः ॥७२॥

ஓ!பிரபோ! எந்த புருஷன் ஸம்ஸாரத்தில் உண்டாகும் ஸுகத்தை அல்ப்பமாக நினைத்து சதாகாலத்திலும்உம்முடையசரணத்தையே தியானம் செய்கிறானோ அந்த புருஷனே தன்யனும், மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அடைகிறவனாகவும் ஆகிறான். எந்த புருஷன் ஸம்ஸாரத்தில் உண்டாகின்ற ஸுகத்தை விடுவதற்கு ஸமர்த்தனாக இல்லையோ அந்த புருஷன் உம்முடைய தர்சனத்தில் ஆஸக்தி இல்லாதவன், அவனுக்குமோக்ஷசுகம் எப்படி உண்டாகும். (72)

वन्द्यानामपि वन्द्य एव भगवन् कालस्य कालो भवान्
गौरीनाथ नटेशिताच भुवने धाताच धातुः प्रभो ।
शार्दूलेऽपि पुराऽकरोः पशुपते शार्दूलविक्रीडितम्
तस्मात्तावककुञ्चितांघ्रिमनिशं वन्दे दयावारिधे ॥७३॥

ஓ! கௌரீபதியே! ஓ! நடநாயகா! நீர் பூஜ்யர்களுக்கும் பூஜ்யன். நீர் அந்தகனுக்கும் அந்தகன். நீர் பிரும்மதேவருக்கும் ஸிருஷ்டி

கர்த்தர். ஓ! பசுபதே! முன்ஒரு ஸமயத்தில் புலியினிடத்தில் புலிக்கிரீடை செய்தவர். ஓ! தயாநிதே! உம்முடைய குஞ்சித சரணத்தை ஸதா நமஸ்கரிக்கின்றேன்! இந்தஸ்துதி சார்த்தூல விக்ரீடித விருத்தம் என்றும்ஸூசனம் செய்திருக்கின்றார். (73)

द्रष्टव्येषु किमुत्तमं नटपतेरानन्दनृत्तं क्षितौ
घ्रातव्येष्वपि किं तदीयकुसुमं श्राव्येषु किं तत्कथा ।
किं स्वाद्येषु तदीयगन्धसलिलं ध्येयेषु किं तत्पदम्
तत्पादांबुजमेकमेव हृदये ध्यायन्ति यद्योगिनः ॥७४॥

பூமியில் பார்க்கத்தகுந்த பதார்த்தங்களுக்குள் எது உத்தமம் (வினு) நடராஜனுடைய ஆனந்தத் தாண்டவம். (விடை) முகர்ந்து பார்க்கிற பதார்த்தங்களுக்குள் எது உத்தமம் (வினு) நடராஜ திவ்ய மூர்த்தியில் சாத்திய புஷ்பம். (விடை) கேழ்க்கத்தகுந்தவை களுக்குள் எது உத்தமம் (வினு) நடநாதருடைய திவ்ய சரித்திரம், (விடை) ஸாப்பிடத் தகுந்ததுகளுக்குள் எது உத்தமம் (வினு) நடராஜநுடைய அபிஷேக தீர்த்தம் (விடை) தியானம் செய்யத்தகுந்ததில் எது உத்தமம் (வினு) எந்தகுஞ்சித சரணத்தை யோகிகள் ஸதா ஹிருதய கமலத்தில் தியானஞ்செய்கிறார்களோ அந்த சரணமே (விடை) (74)

नाथ त्वत्स्मरणं कदाचिदपिवा त्वत्क्षेत्रसन्दर्शनं
त्वत्पुण्योदकमज्जनं च भगवन् त्वन्नृत्तसंवीक्षणम् ।
त्वत्पादांबुजपूजनं च भुवने ये मानवास्तन्वते
धन्यास्ते चरणांबुजं तव कृपां लब्ध्वा लभन्ते विभो ॥८५॥

ஓ! நாதா! எந்த மனுஷ்யர்கள் உலகில் ஒருஸமயத்திலாவது உம்முடைய ஸ்மரணத்தையும், உம்முடைய திவ்ய புண்டரீகக்ஷேத்ர தர்சனத்தையும். உம்முடைய புண்ய சிவ கங்கா தீர்த்த ஸ்நானத்தையும், உம்முடைய தீர்த்த தரிசனத்தையும், உம்முடைய திவ்ய சரணகமல பூஜையையும், செய்கின்றார்களோ அவர்களே தன்ய புருஷர்கள். உம்முடைய கிருபையை அடைந்து உம்முடைய சரணகமலத்தை அடைகின்றார்கள்.,, (75)

शार्दूलांघ्रिपुरीश सर्पदुरहङ्कारापहारीपुरा
सर्वाभीसितदायकोऽसि गिरिजाजाने घृणावारिधे ।

किंच त्वं भवसंयुतोपि भगवन् शम्भो भवानन्वितः
निर्बन्धोऽपि विराजसे नटपते सद्भक्तिबन्धान्वितः॥७६॥

ஓ வியாக்ரபுராதிப (முந்தி தேவதாரு வனத்தில் ரிஷிகளுடைய ஆபிசார ஹோமத்தில் உண்டான) ஸர்ப்பங்களுடைய தாஹங்காரங்களை அபஹரித்தவரும் ஸர்வஜனங்களுடைய இஷ்டங்களை கொடுக்கிறவரும் ஆகிறீர். ஓ பார்வதீபதே! ஓ கருணைக்கடலே! நீர் சம்ஸாரயுக்தராக இருந்தபோதிலும் ஸம்ஸார சம்பந்தம் இல்லாதவராக ஆகிறீர்.

कान्तासंमिश्रदेहोप्यविषयमनसां यःपरस्ताद्यतीनाम् ।

பத்தினியோடு கூடிய திவ்ய மங்கள மூர்த்தியை உடையவராக பார்க்கிற ஜனங்களுக்கு தோன்றியபோதிலும் பரம வைராக்ய காஷ்டையை அடைந்த யதி சிரேஷ்டர்களுக்கும் மேலானவர் என்று காளிதாஸர் நிரூபிக்கின்றார். விஷய ஸாந்நித்யத்திலும் உத்தம புருஷர்கள் ஆசையை வெறுத்தவர்கள் என்பதை ஸூசிக்கின்றார். இந்த அர்த்தத்தை காளிதாஸர் மஹாகவி சாகுந்தல மஹா நாடகத்தில் ஏழாவது அங்கத்தில் காச்யப மகரிஷியினுடைய ஆச்ரம வர்ணனையில் நிரூபிக்கிறார்.

प्राणानामनिलेन वृत्तिरुचिता सत्कल्पवृक्षे वने
तोये काञ्चनपद्मरेणुकपिशे धर्माभिषेकक्रिया ।
ध्यानं रत्नशिलातलेषु विबुधस्त्रीसन्निधौ संयमः
यत्कांक्षन्तितपोभि रन्यमुनयः तस्मिन्तपस्यन्त्यमी ॥

வேண்டிய போஜ்ய பதார்த்தங்களை ஸ்மரணமாத்திரத்தினால் கொடுக்கின்ற கல்ப்ப விருக்ஷங்கள் நிறைந்த இந்த ஆச்ரமத்தில் வாயுமாத்ர பக்ஷகர்களாக இருக்கின்றார்கள். ஜலக்ரீடைமுதலான திவ்ய போகங்களுக்கு உசிதமான ஸ்வர்ணத்தாமரைகளுடைய தூளிகளால் பொன் வர்ணமான தடாக தீர்த்தத்தில் நியமஸ்நானம் செய்கின்றார்கள். ரம்பைமுதலான தேவதாசிகளுடைய ஸமீபத்தில் ரத்னமயங்களான சிலைகளில் தியானம் செய்கின்றார்கள். மற்ற மஹரிஷிகள் தபஸ்ஸுகளால் எந்தஸுகத்தை அடைய விரும்புகின்றார்களோ அவ்விடத்தில் இந்தமகரிஷிகள் அந்த சுக போகத்தை வெறுத்து பரமஸுகமோக்ஷஸாம்ராஜ்யத்தை விரும்பி தபஸ்செய்கின்றார்கள். (ஓ நட நாயக! பந்த

மில்லாதவராக இருந்தபோதிலும் ஸாது ஜனங்களுடைய பக்தியாகிற பக்தத்தோடு கூடினவராக ஆகிறீர். இந்த அர்த்தம் **दामोदर:** தாம பக்தர்களுடைய பக்தியாகிற கயிறை, உதர வயத்தில் கட்டாக உடையவர் பக்தர்களுக்கு பாதீனர் என்கிற பகவத் திவ்யநாமாவினால் பிரகாசிக்கின்றதல்லவா.

तिल्वारण्यपतिर्भवानिह समुद्भूतं त्वदीयं ततः
मच्चेतोहरिणं जिघृक्षवं इमे कामादयो लुब्धका: ।
कुर्वन्त्यद्य समुद्यमं नटपते तानीश जित्वाद्रुतं
क्रीडायोग्यमनोमृगं मम मुदा स्वीकृत्य रक्षप्रभो ॥७७॥

ஓ நடநாயகா தில்லை வனத்திற்கு அதிபதியான நீர் இந்த வனத்தில் உண்டான உமக்கு ஸொந்தமான என்னுடைய சித்தமாகிற மானை காமக்ரோதாதிகளான வேடர்கள் கிரஹிப்பதற்கு ஆசை உள்ளவர்களாக ஆகின்றார்கள். அவர்களை ஜயித்து கிரீடைக்கு யோக்யமான என்னுடைய மனோமிருகத்தை ஸ்வீகரித்து என்னை காப்பாற்றும் **मृगपाणि:** மானை கையில் உடையவர் என்கிற திவ்ய நாமாவளியினுடைய அனுஸந்தானத்தை ஸ்துதி கர்த்தா ஸூசித்திருக்கின்றார். மான் அதிகசஞ்சல ஸ்வபாவம் உடையதாக இருப்பதால் மனஸ்ஸை மானாகவர்ணித்திருக்கின்றார்.

माया ते हि दुरत्यया गुणमयी ख्याता मृडानीपते
लोकोऽयं भुवि बंभ्रमीति भगवन् संसारवार्धौ यया ।
तत्तु तां प्रभवन्ति येतु शरणं त्वामेव भक्त्यानरा:
मत्वा नाथ भजान्ति तत्पदयुगं भक्त्या भजेतावकम् ।

ஓ! பார்வதீ காந்தா! ஓ! பகவந்! ஸம்ஸார ஸமுத்திரத்தில் பூமியில் இந்த ஜனமானது எந்த மாயையினால் சுற்றுகின்றதோ ஸத்துவ ரஜஸ்தமோமயமான ப்ரஸித்திபெற்றதான உமக்கு அதீனமான அந்த மாயையானது தள்ளமுடியாதது. எந்த ஜனங்கள் பக்தியினாலே உம்மையே சரணம் என்று எண்ணி பஜிக்கின்றார்களோ அவர்களே அந்தமாயையை தாண்டுவார்கள். ஆகையால் உம்முடைய திவ்ய சரணகமலத்தை பக்தியினால் பஜிக்கிறேன். (78)

ईश्वरस्सर्वभूतानां हृद्देशेऽर्जुन तिष्ठति। भ्रामयन् सर्वभूतानि यन्त्रारूढानि मायया । तमेव शरणंगच्छ सर्वभावेन भारत । तत्प्रसादात् परां शान्ति स्थानं प्राप्स्यासि शाश्वतम् ।

(கீதை 18-வது அத்தியாயம், சுலோகம் 66) ஓ! அர்ஜுனா ஸர்வ பிராணிகளுடைய ஹிருதய தேசத்தில் ஈச்வரன் இருக்கின்றார். ராட்டன் என்கிற யந்திரத்தில் குதிரை ஆனைகளான பொம்மைகளில்ஏரிய ஜனங்களையந்திரத்தினுடைய அதிபன்எப்படி சுத்தும்படி செய்கிறானோ அவ்விதமாக ஸகல பிராணிகளையும் மாயையினால் சுத்தும்படி செய்கிறார். ஆகையால் அந்த பரமேச்வரனையே ஓ! அர்ஜுனா திரகாண சுத்தியாக சரணாகதி அடை. அவருடைய கருணையால்தான் மாயாநிவர்த்தி ரூபமான நித்யமான அத்விதிய ஆநந்த ரூப அவஸ்தானமான மோக்ஷத்தை அடைவாய் என்கிற கீதார்த்தத்தைஸ்துதி கர்த்தா நிரூபித்திருக்கிறார். இந்தக்கீதையினுடைய பரம தாத்பர்யமானது ஸ்ரீசிதம்பர திவ்ய க்ஷேத்ர சித்ஸபையில் திவ்ய நர்த்தனம் செய்யும் ஆனந்த நடராஜ திவ்ய மூர்த்தியின் உபாஸனமே ஆகும் ஸர்வபூதங்களுடைய ஹிருதய தேசம் என்று இருப்பதால் விராட்புருஷனுடைய ஹிருதய தேசமான புண்டரீகபுரத்தைதான் நிரூபிக்கிறது ஈச்வர: என்கிற பதமும் यथेश्वरस्त्र्यम्बक एव नान्यः ஈச்வரனென்பது முக்கண்ணனைத் தவிர வேறு இல்லை என்கிற காளிதாஸ வசனத்தினாலும்

शब्दोयमीश्वरइति श्रुतिचोदितस्सन् आनीलकण्ठं अवतंसितचन्द्रलेखम् ।
त्वामेव बोधयति नाथ निजार्थपोषात् अन्यं पुनः प्रकरणादि निपीडनेन ॥

ஓ! நாதா! ஈச்வரன் என்கிற சப்தமானது காதில் கேட்டமாத்திரத்தினால் நீலகண்டராயும் சந்திரசேகராயும் உள்ள உம்மையே தன்னுடைய அர்த்த பலத்தினால் போதிக்கின்றது (ஈச ஐச்வர்யே) என்கிற தாதுநிஷ்பன்னமானதால் ஸகல ஐச்வர்யஸம்பன்னர் என்று பொருள். மற்ற தேவதைகளை பிரகரணம்முதலான ஸம்பந்த நிர்ப்பந்தத்தினால் போதிக்கின்றது. வேறு பதத்தினுடைய ஸம்பந்தம் இல்லாமலிருக்கின்ற ஈச்வர பதமானது பரம சிவனுக்கே வாசகமாகின்றது என்கிற ஹரதத்தாசர்யாளுடைய ஸ்துதி வசனத்தாலும் तमेवशरणंगच्छ அந்த ஈச்வரனையே அடை என்ற तच्छब्द ஸ்வாரஸ்யத்தாலும் கிருஷ்ணபரமாத்மாவுக்கும் உபாஸ்யரான நடராஜமூர்த்தியையே போதிக்கின்றது. நடராஜ பக்த சிரோமணியான வ்யாக்ரபாத மகரிஷியின் குமாரரான உபமன்யு மகரிஷியினுடைய உபதேச ஸாரத்தினால் கிருஷ்ணபரமாத்

மாவுக்கு நடராஜமூர்த்தியினுடைய விசேஷ பக்தி இருக்கிறது என்பதை ஏற்கனவே நிரூபித்துயிருக்கிறோம்,, (78)

स्वामिन् गर्भनिवासखेदनिवहाः सोढाह्यनन्तामया
जन्मन्यद्यसूतिश्चिता मम मृतिस्तस्यास्तुदुःखंमहत् ।
सह्यं तज्जनिमद्भिरीश भगवन् प्रायेण भक्तैरहम्
तस्मान्नाथपुनर्जनिर्नटपते माभूदिति प्रार्थये ॥७९॥

ஓ! ஸ்வாமின்! கர்ப்பவாஸத்தில் உண்டான துக்கஸமூகங்கள் என்னால் அநுபவிக்கப்பட்டன. இந்த ஜன்மாவில் மரணமும் நிச்சயமே. மரணதுக்கமும் மிகப் பெரிது. ஓ! பகவன்! பிறவிக்கடலிலாழ்ந்த பக்தர்களாலே அந்த துக்கமும் ஸகிக்கத்தகுந்ததே जातस्यहि ध्रुवो-मृत्युः பிறந்தவனுக்கு' இறப்பது நிச்சயம். ஆகையினால்' ஓ! நடனபதியே! எனக்கு மறுபடியும் ஜனனம் இல்லாமல் இருக்கவேணுமென்று பிரார்த்திக்கின்றேன்,, (79)

श्रीमच्चिन्मयसंसदीश जनने नूनं यदिस्याद्विभो
क्षेत्रेऽस्मिन् मम जायतां नटपते श्रीदीक्षितेन्द्रान्वये ।
यस्मादत्र जनिस्सभेशभुवने सर्वोत्तमा देहिनां
यद्येवं भवदंघ्रिपङ्कजमदं नूनं व्रजेयं क्रमात् ॥८०॥

ஓ! சித்ஸ்பாநாதா! அநிவர்த்தியமான என்னுடைய கர்ம விசேஷத்தால் ஜன்மாவானது ஏற்படுமேயானால் ஓ! விபோ! ஓ! நடனபதே! இந்த சிதம்பர க்ஷேத்திரத்தில் தீக்ஷித சிரேஷ்டர்களுடைய குலத்தில் உண்டாகவேணும். பிராணிகளுக்கு உலகில் இந்த் சிதம்பரத்தில் ஜனிப்பதானது மிகவும் உத்தமம் அல்லவா! உம்முடைய நடன தர்சனத்தினால் திவ்ய ஞானம் உண்டாகி முக்தி பலத்தை அடைவதற்குக் காரணம் ஆகின்றதல்லவா,,, (80)

(தொடரும்.)

சிதம்பரம் ராஜா சோமசேகர தீக்ஷிதர்.

சிறுவருக்கான சிறுகதைக்கொத்து.

விசித்ரவீர்யன்.

1. சந்தனுக்கு ஸத்யவதியினிடம் இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள், ஒருவன் சித்ராங்கதன். மற்றவன் விசித்ரவீர்யன். இவர்களுக்குக் கல்யாணம் ஆவதற்குள் சந்தனு இறந்துவிட்டார். பீஷ்மர் மூத்தபிள்ளையல்லவா? தன் ஸகோதரர்களுடைய ராஜ்யத்தை ஜாக்ரதையாக காப்பாற்றிவந்தார். தக்க வயது வந்தவுடன் சித்ராங்கதனுக்குப் பட்டாபிஷேகம் செய்து வைத்தார். ப்ரதிக்ஞையை பெரியவாள் தவறுவார்களா?

2. சித்ராங்கதனும் சந்தனுவைப்போல் தர்மமாக ராஜ்யத்தை ஆண்டுவந்தான். தர்மமுள்ளவிடத்தில் ஜயமுண்டு அல்லவா? ஆதலால் பூமியில் இவனை ஜயிப்பவர் யாருமில்லை. ஆனாலும் மனுஷ்ய ஜன்மமல்லவா இவர்? மனுஷ்யாள் புண்யபாப பலனான ஸுகதுக்கங்களைக் கலந்து கலந்து அனுபவிப்பவர்களில்லையா? இவனுக்கும் துன்பம் வந்தது. என்ன? சித்ராங்கதன் என்னும் பெயருள்ள ஒரு கந்தர்வன் சண்டைக்கு வந்தான்-

3. உன்பெயரும் என்பெயரும் ஒன்றாக இருக்கிறது. பெயரை யாவது மாற்றிக்கொள். அல்லது சண்டைக்காவது வா? என்றான். இருவருக்கும் சண்டை நடந்தது அரசன் இறந்தான். அவன் தம்பியான விசித்ரவீர்யனுக்கு பீஷ்மர் ராஜ்யத்தைக்கொடுத்தார், காசிராஜனுக்கு அம்பை, அம்பாலிகை, அம்பிகை என்ற மூன்று பெண்களுண்டு. அவர்களுக்குக் காசிராஜன் ஸ்வயம்வரம் ஏற்பாடு செய்திருந்தான்.

4. பீஷ்மர் அவர்களை பலாத்காரமாக தூக்கிப்போவதாக அவர்களிடம் சொல்லி பெண்களை ரதத்திலேற்றிவந்தார். மற்ற அரசர்கள் இவன் பலத்தைக்கண்டு சண்டையில் ஓடிவிட்டார்கள். அம்பை, தான் சால்வராஜனிடம் ஆசைவைத்திருப்பதால் தன்னை விட்டுவிடும்படி சொன்னாள். அப்படியே அவர் விட்டுவிட்டார். ஸால்வனிடம்போய் என்னைக் கல்யாணம் செய்துகொள் என்று அம்பை சொன்னாள்,

5. ஸால்வனே! பீஷ்மர் உன்னைத் தூக்கிப்போனார். உன்னை நான் கல்யாணம் செய்துகொள்ளமாட்டேன் என்றான், மறுபடியும் பீஷ்மரிடம்வந்து என்னை மற்றவர்களைப்போல் விசித்ரவீர்ய

னுக்குக் கல்யாணம்செய்துவை என்றாள். பீஷ்மரோ! வேறொருவனிடம் ஆசைகொண்ட உன்னை எப்படி அன்யனுக்குக் கொடுப்பது! என்று மறுத்தார்.

6. இப்படி பலமுறை ஸால்வனிடமும் பீஷ்மனிடமும் திரிந்தாள். அவளையாரும் கல்யாணம் செய்துகொள்ளவில்லை. என்னசெய்வாள்? பனிரண்டுவருஷம் ஒருகாலால்நின்றுதவம்செய்தாள். அவள் எதிரில் ஷண்முகர்வந்து ஒரு மாலையைக்கொடுத்தார். இதைப் போட்டுக்கொள்பவன் பீஷ்மனை ஜயிப்பான் என்றார்.

7. அந்தமாலையை எடுத்துக்கொண்டு அம்பை ஊர்ஊராகப் போனாள். ஒவ்வொரு ராஜாவாகக் கேட்டாள். பீஷ்மர் நல்ல குணமுள்ளவர். பராக்ரமசாலி. அவருடன் சண்டைபோட யாரும் விரும்பவில்லை. ஆகையால் என்னால்முடியாது! என்னால் முடியாது! என்றார்கள். முடிவாக பாஞ்சால ராஜனிடம் போனாள் அவனுமப்படியே சொல்லிவிட்டான்,

8. வெறுப்புவந்து அந்த அரசன் வீட்டுவாசலில் அம். மாலையை மாட்டிவிட்டுப் போனாள். அந்த மாலையின் விஷயத்தை அறிந்த யாரும் அதன் கிட்டே போவதில்லை. ஒருநாள் சிகண்டினி என்ற ராஜகன்யை தன்கழுத்தில் அந்த மாலையைப் போட்டுக்கொண்டது. அரசன் இதை அறிந்து அப்பெண்ணைநாட்டைவிட்டுத் துறத்திவிட்டான். சிகண்டினீ கங்கை உத்பத்தியான இடத்தில் தவம்செய்யும் ஹிருஷீகரென்ற ரிஷியினிடம்போனாள்.

9. அவருக்குப் பணிவிடை செய்தாள் அந்த புண்யத்தால் ஒரு கந்தர்வன்வந்து தன்புருஷத்தன்மையை சிகண்டினியினிடம் கொடுத்து அவள் பெண்ணுருவைத் தான் வாங்கிக்கொண்டான். இந்த சிகண்டியே பீஷ்மரைக்கொல்லும் சத்ருவானான்.

10. பீஷ்மர் அம்பிகை அம்பாலிகை என்ற இரு பெண்களையும் விசித்ரவீர்யனுக்குக் கல்யாணம் செய்துவைத்தார். அவன் அழகுள்ள அந்தப் பெண்களுடன்ச்ருங்காரமாக ஏழு வர்ஷம ரமித்துக்கொண்டிருந்தான். எதிலும் அதிகம் உதவாது. அதிலும் ச்ருங்காரம் அதிகம் ஆகுமோ? க்ஷயரோகம் வந்தது அவனுக்கு. விசித்ரவீர்யன் இறந்தான், ராஜ்யத்தை பீஷ்மர் பரிபாலித்து வந்தார். வேண்டாமென்ற பீஷ்மரை ராஜ்யம் விடவில்லை. வேண்டுமென்ற செம்படவன்பேரர்கள் அதை அடையவில்லை.

வாரவிருத்தாந்தம்.

மற்றவர் கவனிக்க! 7௨ கொடவாசலில் ஸ்ரீமான் R.கோபாலய்யர் தலைமையில் ஓர் கூட்டங்கூடி திருப்பதி தேவஸ்தானசட்டத்தைக்கண்டித்து பத்து தொண்டர்களை அமற்றி 267 கையெழுத்து வாங்கி சென்னை சட்டஸபை கார்யதர்சிக்கு அநுப்பியிருக்கின்றனர். இவர்களது முயற்சி மிகக் கொண்டாடத்தக்கதே. இதேபோல் மற்ற ஊர் ஆஸ்திகமஹாஜநங்கள் ஸபை கூடி கண்டித்தால் பயனுண்டு. நமது கடமையையும் செய்ததாகும். நமது ஆஸ்திகதையை வெளியிட இச்சமயத்தில் இதைத் தவிர வேறு வழி என்ன ?

தார்மிகர் சேயல். 8௨ வேலூர் ராயப்பேட்டையிலுள்ள சுப்ரமண்யஸ்வாமி கோவிலுக்கு நித்யகட்டளை அபிஷேகார்ச்சனை, நைவேத்யம் முதலியவைகளுக்கு ஷை தெருவிலுள்ள தனது வீட்டை தானமாகக் கோவிலுக்களித்து ரிஜிஸ்தர் செய்தார் ஸ்ரீமான் பாபய்யநாயுடு என்ற தார்மிகர். அவரது செயலை எந்த ஆஸ்திகர் ஆமோதிக்காமலிருப்பார் ? தர்மஸொத்துக்களை மற்றவர் அபஹரிக்காமல் காப்பது தார்மிகர் கடமை.

ஸதுபன்யாஸம். 7௨ தஞ்சைஜில்லா ப்ராஹ்மணஸபையினாதரவில் பிரும்மஸ்ரீ அநந்தராமதீக்ஷிதர்வாள் 'ஸஞ்ஜயன் தூது' என்றோர் உபன்யாஸம் செய்தார். அச்சமயம் உபன்யாஸகர் ஸதாசாரஸம்பன்னராதலால் வர்ணாச்ரமதர்மத்தை வற்புருத்திக் கூறினார். காதுக்கு இனிமையாகக் கதை சொல்வதுமாத்ரமல்லாமல் தர்மத்தை வற்புருத்திக் கூறுவது இக்காலத்தில் அவச்யம் செய்யவேண்டிய வேலை. 8௨ அவரே த்ருவசரிதம் சொன்னார்.

ஸத்விஷயங்கள். 8௨ சிதம்பரம் ப்ராஹ்மணஸபையின் ஆதரவில் பிரும்மஸ்ரீ சசிராமய்யர் ஸத்ஸங்கம் என்பதையும் 10௨ சீயாழியில் ஸ்ரீமான் எல். சுப்ரமண்யய்யர் 'அன்பே சிவம்' என்பதையும் பற்றி உபன்யாஸம் செய்தார்கள். 13௨ முதல் தஞ்சையில் பிரும்மஸ்ரீ தேவங்குடி த்யாகராஜ சாஸ்திரிகளால் தேவீபாகவதம் உபன்யஸிக்கப்படுகிறது. வீண் கதைகளைக் கூறுமல் உள்ளதை உள்ளபடி கூறும் இவர் உபன்யாஸம் ஸபையர் மனதை இழுக்கிறது. 14௨ கும்பகோணத்தில் ஸத்ஸம்ப்ரதாய

ப்ரவசனஸபை ஆதரவில் பகவத்குணவைபவம் என்பதைக்குறித்து ஸ்ரீமான் தி. ஸ்ரீநிவாஸாசார்யர் உபன்யஸித்தார்.

ஸத்யேந்த்ரநாத ஸேன், 13வ டில்லி சட்டஸபையில் கோரின விவாஹ ரத்துமசோதாவைப்பற்றி பேசும்போது ஷை மெம்பர் ஸீதை, ஸாவித்ரிமுதலிய பதிவ்ரதைகள் பிறந்த இந்த பாரதேசத் தேசத்தையும் ஹிந்துஸமூஹத்தையும் அழிக்கும் இச்சட்டத்தைக் கொண்டுவந்து இந்த ஸபை வைதிகர்களது மனதைப்புண்படுத்தக் கூடாதென்றார். இதுபோன்ற மததேச அபிமானிகள் கூடியதல்லவா ஸபை ?

இதுவும் நியாயமே. ரகுவீரஸிங் என்பவர் ஷை சட்டம் தனக்கு ஸம்மதமானாலும் எந்த இடத்திற்குத் தான் ப்ரதிநிதியோ ஆங்குள்ளோர் இச்சட்டத்தை விரும்பவில்லை. ஆதலால் இதை எதிர்க்கிறேனென்றார். குடிகளது அபிப்ராயப்படி நடப்பதற்காகவே ஸப்யர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆகலால் ஜநங்கள் அபிப்ராயத்தை அவர்கள் அறியவேண்டும். நாமும் அறிவூட்டவேண்டும்.

இப்போதாவது அறிவரா ? கோர் மதவிரோதமான பல சட்டங்களைக் கொண்டுவருவதில் பெயர்பெற்றவர். ஷைசட்டத்தைப் பற்றி அவர் பேசும்போது ஸபையை விட்டு பலர் வெளியில் திரிந்தனர். பலமுறை மணி அடித்தும் இவரும் இவர் ஸகாக்களும் பலமுறை அழைத்தும் பலர் ஸபையில் நுழையவே இல்லை. குறைந்தபக்ஷம் ஸபைக்கு வரவேண்டியவர்கூட வரவில்லை. ஸபை ஒத்திவைக்கப்பட்டதென்றறிந்தவுடன் எல்லோரும் வந்து தத்தம் ரிகார்டுகளை எடுத்துச்சென்றனர். இதிலிருந்தாவது அவருக்கு அறிவுண்டாமா ?

நம் கடமை. அடுத்த சட்டஸபையில் அச்சட்டம் தலை நீட்டும். அஃதென்னவானாலும் க்ராமநகரஜநங்கள் ஒன்றுகூடி தங்கள் மதாபிமானத்தை அடிக்கடி வெளியிடவேண்டும். நமது ஆக்ஷேபத்தை உலகிற்கு அறிவிக்கவேண்டும். இல்லையேல் தாங்கள் சொல்வதுதான் பொதுஜந அபிப்ராயமென்று சீர்திருத்தக்காரர் கூறி தனக்கு பலந்தேடுவர்.

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா.